பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 02 திங்கட்கிழமை 18.08.2025 கதிர் 282

## இனி இது ரகசியம் அல்ல!



இன்றைய கதவடைப்புப் போராட்டம் வெற்றி பெறுகிறதோ இல்லையோ தமிழர் இன ஒற்றுமை அதற்காக அரசியல் கட்சிகளின் ஒற்றுமை எல்லாவற்றுக்கும்

☞ 2

# ஒட்டுசுட்டான் சாவுச் சம்பவத்தை வைத்து இலாபம் தேட சில குழுக்கள் முயற்சியாம்

முல்லைத்தீவு - ஒட்டுச்சுட்டான் பிரதேசத்தில் நபரொருவர் உயிரிழந்த சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு சில குழுக்கள் அரசியல் இலாபம் தேட முயற்சிக்கின்றன. அந்த நோக்கத்திலேயே வடக்கு மற்றும் கிழக்கில் அமைதியின்மையை ஏற்படுத்துவதற்காக ஹர்த்தாலுக்கும் அழைப்பு விக்கப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் மக்கள் உண்மை என்ன என்பதை உணர்ந்து அதற்கமைய தீர்மானங்களை எடுக்க வேண்டும் என சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு - ஒட்டுச்சுட்டான் பிரதேசத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் சில அரசியல் கட்சிகளால் வடக்கு மற்றும் கிழக்கில் ஹர்த்தால் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் இராணுவ முகாம்களை இடம் மாற்றும் செயற்பாடுகள் கடந்த மாதங்களில் முன்னெடுக்கப்பட்டுவந்தன. அதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுச்சுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட

☞ 2

# முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்க பொலிஸ் விசாரணை வளையத்திற்குள்

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவை விசாரணை ஒன்றுக்கு முன்னிலையாகுமாறு சட்டவிரோத சொத்து சேகரிப்பு விசாரணைப் பிரிவு பொலிஸார் அழைப்பு விடுத்துள்ளனர்.

பணச்சலவை குற்றச்சாட்டின் கீழ் மேற்கொள்ளப்படும் விசாரணை தொடர்பில் வாக்குமூலமொன்றைப் பெறுவதற்காகவே அவர் பொலிஸாரினால் அழைக்கப்பட்டுள்ளார்.

தனது வருமானத்துக்கு அதிகமான சொத்துக்களை அவர் சேகரித்துள்ளதாக மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாடொன்றின் அடிப்படையில் குறித்த விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

☞ 2

# பாதாளக் குழுக்களை ஒடுக்க சிறந்த திட்டம் செயற்பாட்டில்

### பொலிஸ் மா அதிபர் அறிவிப்பு

பாதாள உலக குழு நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கு தற்போதுள்ள அமைப்பை விட சிறந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

கண்டியில் நேற்று மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

முப்படைகள் மற்றும் பொதுமக்களின் ஆதரவுடன் இந்தக் குற்றங்களை அடக்குவதற்குத் தாம் பணியாற்றி வருகிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சில பாதாள உலக குழு நடவடிக்கைகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் சில அரசியல் ஆசீர்வாதங்களையும் சில பொலிஸ் அதிகாரிகளின் ஆதரவையும் பெற்றுள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் சுட்டிக்காட்டினார்.

சட்டத்தை நிலைநாட்டுவதில் எந்த அரசியல் செல்வாக்கும் இல்லை என்றும், அரசியல் சூழல் மிகவும் நன்றாக உள்ளது என்றும் கூறிய பொலிஸ்மா அதிபர், எந்தவொரு குற்றத்தையும் மறைக்கவோ அல்லது புறக்கணிக்கவோ

☞ 2

# இன்று அரைநாள் மட்டுமே ஹர்த்தால் அனுஷ்டிப்பு

### தமிழ் அரசுக் கட்சி அறிவிப்பு

முத்துஜயன்கட்டு இளைஞன் இறப்பு மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இராணுவ பிரசன்னத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இன்றைய தினம் திங்கட்கிழமை காலை முதல் மதியம் வரை முழு ஹர்த்தால் அனுஸ்டிக்கப்படுகிறது என்று தமிழ் அரசுக் கட்சி அறிவித்துள்ளது.

வடக்கு கிழக்கில் அளவுக்கதிகமான இராணுவ பிரசன்னத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் இந்த ஹர்த்தாலுக்கு அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் மற்றும் வணிக பிரதிநிதிகள் உட்பட பல்வேறு தரப்பினர் முழுமையான ஆதரவு வழங்குகின்றனர். பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இராணுவ பிரசன்னத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் முழுமையாக முடங்க வேண்டும். அதனுடாக ஆளும்தரப்புக்கு வலுவான செய்தியை எடுத்துரைக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பொதுமக்களிடம் வலியுறுத்துகிறது.

முல்லைத்தீவு முத்துஜயன்கட்டு

☞ 2

# வடக்கு கிழக்கு அதிபாதுகாப்பு வலயமாக இருப்பது நல்லிணக்கத்திற்குப் பாதிப்பு

### காவிந்த ஜயவர்த்தன எம்.பி. தெரிவிப்பு

முத்துஜயன்கட்டு பகுதி இளைஞன் இறப்பு குறித்து ஆளும்தரப்பு நடுநிலையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். போர் முடிவடைந்த பின்னரும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் அதிபாதுகாப்பு வலயமாக இராணுவத்தால் அடையாளப்படுத்தப்படுவது நாட்டின் நல்லிணக்கத்துக்கும், சகவாழ்வுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில்

☞ 2

# ஒட்டுசுட்டான் இளைஞர் இறப்பு விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு

### இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞன் உயிரிழந்த விவகாரத்தில் ஒரு தலைப்பட்சமாக செயற்படுவதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் முயற்சிக்கவில்லை. பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம் என இராணுப் பேச்சாளர் பிரிகேடியர் வருண கமகே தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் செய்தியாளர்களிடம் நேற்று இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவ முகாமிற்குள் சில தரப்பினர் அனுமதியின்றி பிரவேசிக்க முற்பட்டமையே இந்த

☞ 2

# இராணுவமயமாக்கலின் சிறு உதாரணமே ஒட்டுசுட்டான் இளைஞனின் உயிரிழப்பு

### அதனைக் கண்டித்தே இன்று ஹர்த்தால்

இராணுவமயமாக்கலின் சிறு உதாரணமே முத்துஜயன்கட்டு இளைஞனின் இறப்பு. இராணுவ முகாமை அண்மித்து வாழும் மக்கள் இராணுவ முகாமை அண்டி வாழும் சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இருதரப்பிற்கும் இடையில் கொடுக்கல் வாங்கல் இடம்பெறுகிறது. இதுவே மிகமோசமான சமூக பிரச்சினை. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தோம். வடக்கு மற்றும் கிழக்கில் இன்றைய தினம் காலை முதல் மதியம் வரை ஹர்த்தாலில் அனைவரும் ஈடுபட வேண்டும். இராணுவ பிரசன்னத்துக்கு எதிராக ஆளும்தரப்புக்கு இந்த ஹர்த்தால் ஊடாக வலுவான செய்தியை வெளிப்படுத்த வேண்டும் என என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் வடக்கு மற்றும் கிழக்கு மக்களிடம் வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். தமிழ் அரசுக் கட்சி இன்று அழைப்பு விடுத்துள்ள ஹர்த்தால் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆளும்தரப்பு நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தை அடுத்து சுமந்திரன் இந்தக் கருத்தை வெளிப்படுத்தினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ இன்று (நேற்று) அரச தகவல் திணைக்களத்தில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தியுள்ளார். இந்த ஊடக சந்திப்பில் இராணுவ ஊடகப்பேச்சாளரும், பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் கலந்துக்கொண்டுள்ளனர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விடுக்கப்பட்ட ஹர்த்தால் பற்றி பேசப்பட்டுள்ளது.

இந்த ஊடக சந்திப்பில் விசேடமாக குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு பதிலளிக்க வேண்டும். இந்த சம்பவம் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல, இவ்வாறான சம்பவங்கள் நாட்டில் எப்பகுதியில் இடம்பெற்றாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் குறிப்பிடுகிறார். அத்துடன் இதற்கு ஹர்த்தாலின் ஈடுபட வேண்டிய அவசியமில்லை என்றும் குறிப்பிடுகிறார்.

நாட்டில் ஏனைய மாகாணங்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருப்பதை போன்று

# ஒட்டுசுட்டான் உயிரிழப்பு சம்பவத்திற்குள் இனப்பிரச்சினையை திணிக்கவேண்டாம்

### அமைச்சரவைப் பேச்சாளர் கோரிக்கை

ஒட்டுசுட்டான் இளைஞரது உயிரிழப்புக்கும் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுவதாகக் கூறப்படுவதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இந்த சம்பவத்துக்குள் தமிழ், முஸ்லிம், சிங்களம் என இனப் பிரச்சினையை திணிக்க வேண்டாம் என சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் தலைவர்களிடம் கேட்டுக் கொண்டார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று அமைச்சர் இந்த கோரிக்கையை முன்வைத்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

☞ 2

### காற்றாலை, கனிய மணல் அகழ்வு;

# மன்னாரில் எதிர்ப்புப் போராட்டம் 15ஆவது நாளாகவும் தொடர்கிறது

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று 15 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன்னெடுத்துவருகின்ற போராட்டத்திற்கு இன்றைய தினம்

☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சாவுமணிஅடித்துள்ளதுஎன்பதுசர்வநிச்சயம். அதை மற்றொரு வடிவத்தில் சொன்னால் கட்சி அரசியலே இனிவரும் காலங்களில் முனைப்புப் பெற்றுத் திகழும் என்பதற்கான கட்டியமே இந்தக் கதவடைப்பு.

போருக்குப்பின்னர்இவ்வளவுகூர்மையாக தமிழ் அரசியல் கட்சிகளும், தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமையை வலியுறுத்தித் தம்மைத்தாமே கருத்துருவாக்கிகள் என்று அழைத்துக்கொள்ளும்பத்திஎழுத்தாளர்களும் சிலசிவில்சமூக அமைப்புக்களும்தமிழ்மக்களின் பிரச்சினை ஒன்றில் தங்களுக்கிடையிலான வேறுபாட்டை இதுவரையில் வெளிப்படுத்தியதில்லை.

நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் என்பிபியிடம் இந்த அரசியல் தரப்புக்கள் அடைந்த தோல்வியைத் தொடர்ந்து தமிழ் மக்கள்தம்மைப்புறக்கணித்துவிடுவார்களோ என்று கடும் அச்சம் கொண்டிருந்த சமயத்தில் எல்லாத் தமிழ்க் கட்சிகளும் ஒற்றுமைப்படவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. ஆனால் அந்தக் கருத்து அற்ப ஆயுசில் இப்படிச் செத்துப் போகும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

தமிழ் அரசுக் கட்சி அறிவித்த கதவடைப்புக்கு இப்போது தமிழ் தேசிய மக்கள்முன்னணி, அதனோடிணைந்ததமிழ் மக்கள் பேரவை ஆகியன முழுமையான ஒத்துழைப்பின்மையைவெளிப்படுத்தியுள்ளன.

புளொட் தனது வவுனியா நகர சபைத் தலைவர் மூலமாகவும் ரெலோவும் ஜனநாயகப் போராளிகள் கட்சியும் வெளிப்படையாகவும் தமது ஆதரவை இந்தப் போராட்டத்திற்கு இறுதி நேரத்தில் தெரிவித்திருந்தன. இது எதிர்கால அரசியல் கட்சிக் கூட்டணிகளுக்கான சிந்தனைகளின் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்ட தனித் தனிக் கட்சிகளின் ஆதரவே தவிர இவை அங்கம் வகிக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஆதரவில்லை.

ஒருகாலத்தில் மாகாண சபைத் தேர்தலோ மற்றொரு தேர்தலோ வந்தால் அப்போது தமிழ் அரசுக் கட்சியுடன் கூட்டணி சேர்வதற்கான வாய்ப்புக்களை முற்றாக மூடிவிடக்கூடாது என்பதால் இந்த ஆதரவு பாசாங்கில் இந்தக் கட்சிகள் ஈடுபட்டுள்ளன. அதைத் தவிர வேறு எந்தவொரு நோக்கமும் அவற்றுக்கில்லை.

இந்தப் போராட்டத்திற்கு தமிழ் அரசுக் கட்சியே அழைப்பு விடுத்திருந்தது. அந்தக் கட்சிக்குள் இருந்த யார் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தார்கள் என்பதோ அப்படி அழைப்பு விடுத்தவர் அந்தக் கட்சியின் ஏனைய உறுப்பினர்களுடன் பேசினாரா இல்லையாஎன்பதோமற்றையகட்சிகளுக்குத் தேவையற்ற விவகாரம். அது தமிழ் அரசுக் கட்சியின் உட்கட்சிப் பிரச்சினை. அதனைத் தூக்கிப்பிடித்துபோராட்டத்தைக்குழப்புவதற்கு அவர்கள் எடுத்துள்ள இந்த முயற்சி தமிழ் தரப்பின் ஒற்றுமைச் சவப் பெட்டியின் மீது அறையப்பட்ட கடைசி ஆணி.

தமிழ் மக்கள் இதனைச் சரியாகப் புரிந்துகொள்வதே மிக முக்கியமானது. இனிவரும் காலம் தனித் தனி அரசியல் கட்சிகளின் அரசியல் காலம் என்பதைச் சரிவரப் புரிந்துகொண்டு வாக்களிப்பதே நல்லது.ளே!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இன்று....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியை சேர்ந்த 32 வயதுடைய இளைஞனின்சடலம்கடந்த8ஆம்திகதிமுத்து ஐயன்கட்டு குளத்தில் கண்டுப்பிடிக்கப் பட்டது.முத்துஐயன்கட்டு பகுதியை சேர்ந்த இளைஞர்களை இராணுவத்தினர் ஆகஸ்ட் 7 ஆம் திகதி முத்துஐயன்கட்டு முகாமிற்குள் அழைத்துச் சென்றதாகவும், இராணுவத்தினரால் அவர்கள் கடுமையாக தாக்கப்பட்டதாகவும்,அதனால் ஒரு இளைஞர் உயிரிழந்ததாகவும் குறிப்பிடப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் திணைக்களம் விசேட ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டு முத்துஐயன்கட்டுமுகாமிற்குள் ஒருதரப்பினர் அனுமதியின்றி சென்றனர் எனவும், அவர்களை விரட்டியடிக்கும்போது ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார் எனவும் குறிப்பிட்டு,.இந்தச் சம்பவம் தொடர்பில் நியாயமான விசாரணைகளை மேற்கொள்வதாக'குறிப்பிட்டிருந்தது.

முத்துஐயன்கட்டு இளைஞனின் இறப்பு தொடர்பில்பல்வேறுதரப்பினர்கடும்எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் குடிகொண்டுள்ள இராணுவ பிரசன்னத்துக்கும், இளைஞனின் இறப்புக்கும் எதிர்ப்பு தெரிவித்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தது.இந்த தீர்மானத்தை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அரசுத் தலைவர்க்கு எழுத்துமூலமாக அறித்து கடந்த 15 ஆம் திகதி ஹர்த்தாலில் ஈடுபட அறிவித்திருந்தது.

இருப்பினும் பல்வேறு நியாயமான காரணிகளால் ஹர்த்தால் இன்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்த ஹர்த்தாலுக்கு நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் பலவும் சிவில் தரப்பினர்,வணிகஅமைப்பினர் முழுமையாக ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளனர்.

இதற்கமைய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன்றைய தினம் காலை முதல் மதியம் வரை முழு ஹர்த்தால் அமுல்படுத்தப்படுகிறது.பொதுமக்களின்இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் ஹர்த்தாலில் ஈடுபடுமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சகல தரப்பினரிடமும் வலியுறுத்துகிறது.

## ஒட்டுசுட்டான்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சம்பவத்துக்குள் தமிழ் மக்களின் காணிகள் அபகறிக்கப்படுவதாகக் கூறப்படுவதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இராணுவ முகாம் இடமாற்றம் செய்யப்படுகிறது. இடமாற்றம் செய்யப்பட்ட பின்னர் அந்த இடத்தை அரசாங்கத்தின் வேறு திட்டங்களுக்கு பயன்படுத்தவோ அல்லது அந்த நபர்களுக்கு வழங்கவோ முடியும். எனவே இதனை காணி விவகாரத்துடன் தொடர்புபடுத்த வேண்டியதில்லை. அது மாத்திரமின்றி இந்த சம்பவத்துக்குள் தமிழ், முஸ்லிம், சிங்களம் என பிரச்சினையை திணிக்க வேண்டாம்.

இராணுவ முகாமுக்குள் எவரேனும் அத்துமீறி பிரவேசிக்க முற்பட்டால் அவர்களை வெளியேற்ற இராணுவத்தினர் நடவடிக்கை எடுப்பர்.அதனையேஇந்தச்சம்பவத்தின்போதும் இராணுவத்தினர் மேற்கொண்டிருக்கின்றனர். இதன்போது ஏதேனும் சட்ட மீறல்கள் இடம்பெற்றிருக்கின்றனவா என்பது தொடர்பிலேயே தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.சம்பவத்துடன் இராணுவத்தினர் தொடர்புபட்டிருக்கின்றனர் என்பதற்காக நாம் பாதிக்கப்பட்டுள்ளோருக்கு நியாயத்தை வழங்கத் தவறவில்லை.

நாட்டில்சகலபகுதிகளிலும்உள்ளமக்களும் எமக்கு ஆதரவளித்திருக்கின்றனர். எனவே எவ்வித பேதமும் இன்றி சகல மக்களதும் உரிமையையும் நாம் பாதுகாப்போம். எனவே நீண்ட காலமாக தீர்க்கப்படாமலுள்ள மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கு வடக்கு, கிழக்கு அரசியல்தலைவர்கள் முயற்சிக்கவேண்டுமே தவிர ஆளும்தரப்புக்கு எதிராக மக்களை தூண்டிவிடுவதற்கு முயற்சிக்க கூடாது. வரலாற்றைநிகழ்காலத்துடன் தொடர்புபடுத்தி மக்களை அச்சப்படுத்த வேண்டாம் என்றும் அவர்களிடம்கேட்டுக்கொள்கின்றோம்என்றார்.

## ஒட்டுசுட்டான்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முத்தையாங்கட்டு பிரதேசத்தில் அமைந்துள்ள 12ஆவது சிங்கப்படையணிக்குரிய முகாம் இடமாற்றம் செய்யப்படுவதற்காக தயார் நிலையில் இருந்தது.

கடந்த ஜனவரி முதல் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்த முகாமில் ஆரம்பத்தில் 250 இராணுவ உறுப்பினர்கள் காணப்பட்டனர். எனினும் இடமாற்ற நடவடிக்கைகள் காரணமாக இறுதியாக 25 பேர் மாத்திரமே இங்கு பணிக்கமர்த்தப்பட்டிருந்தனர். இங்கிருந்த இராணுவத்தினர் நீக்கப்பட்டிருந்தாலும் பொருட்கள் அவ்வாறே காணப்படுகின்றன. இந்நிலையிலேயே ஆகஸ்ட் 7ஆம் திகதி அப்பிரதேசத்தைச் சேர்ந்த ஐவர் இரவு 11.30 மணியளவில் அனுமதியின்றி இந்த முகாமிற்குள் பிரவேசித்துள்ளனர். முகாமில் வைக்கப்பட்டிருந்த இரும்பு உள்ளிட்ட பொருட்களை கொள்ளையிடுவதற்காகவே இவர்கள் முகாமுக்குள் பிரவேசித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த ஐவரும் முகாமிலிருந்த இராணுவத்தினரால் விரட்டப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் பிடிபட்டதால் அவர் அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். எஞ்சியர்கள் ஓடிக் கொண்டிருந்த போது அவர்களில்ஒருவர் முத்தையாங்கட்டுவாவியில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். எவ்வாறிருப்பினும் இவர்கள் தாக்கப்பட்டதாக சிலரால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டமையால் அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அதற்கமைய சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, இதனோடு தொடர்புடையதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மேலும் இரு சிப்பாய்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மூவரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்த நபரின் பிரேத பரிசோதனை யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்டது. பிரேத பரிசோதனை அறிக்கைக்கமைய குறித்த நபரின் மரணத்தில் எவ்வித பாரதூரமான காயங்களும் காரணம் இல்லை என்றே கூறப்பட்டுள்ளது. மேலதிக பரிசோதனைகளுக்காக அவரது உடல் உறுப்பு மாதிரிகள் அந்ததந்த பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும்இந்தசம்பவத்துக்கான அடிப்படை காரணிகள் திரிபுபடுத்தப்பட்டு போலியான தகவல்கள் வெளியிடப்பட்டு சில அரசியல் குழுக்கள் வடக்கு மற்றும் கிழக்கில் பிரச்சினையை ஏற்படுத்த முயற்சிக்கின்றன. இராணுவத்தினரால் பிரஜையொருவர் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக போலியான தகவலை மக்கள் மத்தியில் பரப்புகின்றனர்.

இது முற்றுமுழுதாக பிழையானதொரு பிரசாரமாகும். தமது அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மக்கள் மத்தியில்முரண்பாடுகளைஏற்படுத்துவதற்காக அமைதியான சூழலை சீர்குலைப்பதற்காக எடுக்கப்படும் முயற்சியாகவே நாம் இதைப் பார்க்கின்றோம். இந்தக் கொள்ளை சம்பவத்துடன்தொடர்புடையசந்தேகநபர்களை நீதிமன்றத்தில்முன்னிலைப்படுத்துவதற்கானபீ அறிக்ஜ ஒட்டுச்சுட்டான் பொலிஸ் நிலையத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய எதிர்வரும் நாட்களில் அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவார்கள்.

இவையே தற்போது முன்னெடுக்கப்பட்டு நடவடிக்கைகள் ஆகும். சம்பவம் என்ன என்பதை சரியாகப் புரிந்து கொள்ளுமாறு ஆளும்தரப்பு என்ற ரீதியில் வடக்கு, கிழக்கு மக்களின் கேட்டுக் கொள்கின்றோம். சில குழுக்களால்பிரசாரங்களைமுன்னெடுப்பதற்கு முயற்சிக்கப்படும் சம்பவம் இங்கு இடம்பெறவில்லை. கடந்த காலங்களில் இடம்பெற்ற சில சம்பவங்களுடன் இதனையும் இணைத்து மக்கள் மத்தியில் தவறான ஒரு புரிதலை ஏற்படுத்துவதே சில தரப்பினரின் நோக்கமாகவுள்ளது.

தற்போது நாட்டை பொருளாதார ரீதியில் அபிவிருத்திசெய்யவேண்டியதேவைகாணப் படுகிறது. அதற்குநாட்டில்அமைதிஉறுதிப்படுத் தப்படவேண்டும்.வடக்கு,கிழக்குமாத்திரமின்றி சகல மக்களினதும் தலையீடு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகும். இவ்வாறான நிலைமையிலேயே சில குழுக்கள் தமது அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான செயற்பாடுகளைநாம்முற்றாகஎதிர்க்கின்றோம். இவற்றைப் புரிந்து கொண்டு அமைதியாக செயற்படுமாறு மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

## இராணுவப் பேச்சாளர் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்துக்கான அடிப்படை காரணியாகும். இவ்வாறு உட்பிரவேசித்தவர்களில் ஒருவர் பிடிபட்ட நிலையில் அவர் அவரது குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டார். குறித்த நபர் தொடர்பில் இதற்கு முன்னரும் அதாவது ஜனவரி 18ஆம் திகதி இதே முகாமிற்குள் நுழைந்து பொருட்களை திருடியமை தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7ஆம்திகதிசம்பவம்இடம்பெற்றபோதிலும், 8ஆம் திகதியே முத்தையன்கட்டு வாவியில் நபரொருவரின் சடலம் காணப்படுவதாக அறியக்கிடைத்தது.பின்னர்முன்னெடுக்கப்பட்ட பொலிஸ்பரிசோதனைகளையடுத்தேஇந்தநபர் முதல்நாள் முகாமுக்குள் பிரவேசித்தவர்களில் ஒருவர் எனத் தெரியவந்தது. அதற்கு முன்னர் இராணுவத்தில் எவரும் இது தொடர்பில் அறிந்திருக்கவில்லை.எவ்வாறிருப்பினும்இந்த தகவல் கிடைத்த பின்னர் முன்னெடுக்கப்பட்ட விசாரணைக்கமைய இந்த இறப்புக்கும் இராணுவத்தினருக்கும் தொடர்பில்லை எனத் தெரியவந்துள்ளது.

இந்த விவகாரத்தில் ஒரு தலைப்பட்சமாக செயற்படுவதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் முயற்சிக்கவில்லை. பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுவரும்விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பினையும்வழங்குகின்றோம். அதேபோன்று எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கும் நாம் முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றார்.

## மன்னாரில்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவு வழங்கும் வகையில் பள்ளிமுனை மற்றும் பெரிய கரிசல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் குறித்த போராட்டத்தில் இணைந்து கொண்டு தமது ஆதரவை தெரிவித்து வருகின்றனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தலையில்கருப்புபட்டிஅணிந்துபோராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

## பாதாளக்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன்னிடமிருந்து ஒருபோதும் உத்தரவுகள் வராது என்றும் கூறினார்.

'துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் தொடர்பாக, சந்தேக நபர்களை விசாரித்து கைது செய்துள்ளோம். மேலும் நாங்கள் மிகவும் நுட்பமானதிட்டத்துடன்முன்னேறிவருகிறோம்.

மற்றநிறுவனங்கள், குறிப்பாகமுப்படைகள் மற்றும் பொதுமக்களின் ஆதரவுடன் இதைச் செய்ய ஒரு திட்டம் உள்ளது.

போதைப்பொருள் கடத்தல் நேற்று இன்று நடக்கவில்லை, அதேபோன்று பாதாள உலகக் குழு நடவடிக்கைகளும் நேற்று தோன்றியதல்ல.

அதற்காக சில அரசியல் ஆசீர்வாதங்கள் பெறப்பட்டுள்ளன. பொலிஸார் மற்றும் அதிகாரிகளிடமிருந்துஆதரவுபெறப்பட்டுள்ளன. முப்படைகளைச் சேர்ந்தவர்களும் இதற்குப் பயன்படுத்தப்பட்டனர், போதைக்கு அடிமையானவர்களும் இதற்குப் பயன்படுத்தப்பட்டனர்.

எனவே இந்த நடவடிக்கைகள் வெளிநாடுகளுக்குச் சென்ற கோழைகள் குழுவால் மேற்கொள்ளப்படுகின்றன.

இது குறித்து சர்வதேச சமூகத்துடன் நாங்கள் இணைந்துபணியாற்றிவருகிறோம்.' என்றார்.

## வடக்கு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வினவியபோது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தின்உண்மையைவெளிப்படுத்துவதாக அரசுத் தலைவர் அநுரகுமார கத்தோலிக்க சபைக்கும், நாட்டுமக்களுக்கும்தொடர்ச்சியாக வாக்குறுதி வழங்கியுள்ளார்.

குண்டுத் தாக்குதல் விவகாரம் தொடர்பில் ஆளும்தரப்புமுன்னெடுத்தவிசாரணைகளை ஆளும்தரப்பு விசாரணை செய்ய வேண்டிய நிலை காணப்படுவதாக அரசுத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.இவ்வாறான பின்னணியில் தான் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்துள்ளோம்.

பிரதி பாதுகாப்பு அமைச்சரின் விடயதானங்கள் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படாத காரணத்தால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வர முடியாது என என்று ஆளும் தரப்பினர் குறிப்பிடுகின்றனர்.அரசுத் தலைவர் வெளிநாடுகளுக்கு பயணம் செய்யும் போது பாதுகாப்புபதில்அமைச்சராக அருணஜயசேகர பதவி வகித்துள்ளார்.ஆகவே இவ்விடயத்தில் அவரது விடயதானம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை என்று ஆளும் தரப்பினரால் குறிப்பிட முடியாது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன்றைய தினம் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. முத்துஐயன்கட்டு பகுதியை சேர்ந்த இளைஞன் மரணத்தை அடியொற்றியதாக இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த இளைஞனின் இறப்பு தொடர்பில் ஆளும்தரப்பு நடுநிலையான முறையில் விசாரணை செய்து உண்மையை பகிரங்கப்படுத்த வேண்டும்.

போர் முடிவடைந்த பின்னரும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் அதிபாதுகாப்பு வலயமாக இராணுவத்தால் அடையாளப்படுத்தப்படுவது நாட்டின் நல்லிணக்கத்துக்கும்,சகவாழ்வுக்கும்பாதிப்பை ஏற்படுத்தும். தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த ஆளும்தரப்பு பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றார்.

# ஹர்த்தாலுக்கு ரெலோ ஆதரவு

முப்படைகளுக்கும் எதிராக ஆயும் ஏந்தியவர்கள் என்ற வகையில் இராணுவப் பிரசன்னத்துக்கு எதிரான இன்றைய ஹர்த்தால் போராட்டத்துக்கு ரெலோ ஆகிய நாம் ஆதரவளிக்கின்றோம் என்று ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

தமிழினத்தின் மீது தொடர்ச்சியாகச் சிங்களப் பேரினவாத அரசுகளாலும், முப்படைகளாலும் அரங்கேற்றப்பட்டுவரும் அடக்குமுறை, ஒடுக்குமுறை, இன அழிப்புப் படுகொலைகளை வெறுமனே நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. முப்படையினரின் இனவாதச் செயற்பாடுகள் நடைபெற வடக்கு, கிழக்கிலே காணப்படும் அதிகூடிய தேவையற்ற இராணுவ முகாம்களும் முப்படையின் பிரசன்னமுமே காரணமாகும்.

2009 ஆம் ஆண்டு போர் மௌனிப்புக்குப் பிறகும்கூட தமிழினத்தை நிம்மதியாக வாழ விடக்கூடாது என்கின்ற நிகழ்ச்சி நிரலில் படையினர் செயற்படுவதாக நாம் கருதுகின்றோம். அன்றைய காலத்தில் எமது இனத்தின் மீது பேரினவாதிகளால் நிகழ்த்தப்பட்ட அடக்குமுறைகளுக்கு முகம் கொடுத்து வந்த எமது மக்களைப் பாதுகாப்பதற்காக வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவம் உள்ளிட்ட முப்படைகளின் பிரசன்னத்தையும் முற்றாக அகற்ற வேண்டும். அதன் ஊடாகவே பொது மக்களின் சுதந்திர வாழ்வியல் உறுதிப்படுத்தப்படும் என்ற நம்பிக் கையில் மக்களையும், மண்ணையும் காத்திட ரெலோ வினராகிய நாம் ஆயுதம் ஏந்தினோம். இன்றைய சூழ் நிலையில் மக்களை அச்சுறுத்தும் அதிக இராணுவப் பிரசன்னம் அதன் அடக்குமுறை இன அழிப்பின் வடிவங்களாகும். இவை எமது இனத்தின் எதிர்கால இருப்பைக் கேள்விக்குறியாக்கின்றன.

அந்த வகையில் இன்று இலங்கைத் தமிழரசுக் கட்சியால் முன்னெடுக்கப்படும் வடக்கு, கிழக்கு தழுவிய இராணுவப் பிரசன்னத்துக்கு எதிரான போராட்டத்துக்குத் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஆதரவாளிக்கின்றது. இதேவேளை, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அனைத்து தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடி இந்த முடிவை எடுத்திருக்க வேண்டும். மாறாக தன்னிச்சையாக எடுத்த முடிவு தவறாகும்.

இருந்தபோதிலும் இராணுவம் உள்ளிட்ட முப்ப டைகளின் பிரசன்னத்தை எமது தாயக பூமியான வடக்கு, கிழக் கில் இருந்து முற்றாக அகற்ற வேண் டும். அதன் ஊடாகவே தமிழினத்தை சுதந் திரமாக வாழ விட வேண்டும் என்ற உயரிய நோக்கில் முப்படைகளுக்கும்எதிராகஆயுதம்ஏந்தியவர்கள்என்ற வகையில் இராணுவப் பிரசன்னத்துக்கு எதிரான ஹர்த் தால் போராட்டத்துக்குத் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஆகிய நாம் ஆதரவளிக்கின்றோம்.' - என்றார்.

## இழந்த வாக்கு வங்கியை அதிகரிக்கவே கதவடைப்புப் போராட்டத்திற்கு அழைப்பு

### இப்படிப் பரிகசிக்கிறார் அமைச்சர் விமல்

இழந்துபோன தங்களுடைய வாக்கு வங்கியை அதிகரிக்கவே கதவடைப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். முத்தையன்கட்டு பிரதேசத்தில் இடம் பெற்ற சம்பவத்தை தொடர்ந்து 18 ஆம் ஆம் திகதி வடக்கு, கிழக்கு முழுவ தும் கதவடைப்பு போராட்டத்தை மேற் கொள்ளுமாறு தமிழரசு கட்சியின் சுமந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். உண்மையிலேயே இந்த கதவடைப்பு போராட்டம் தேவையற்றது என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். முத்துஐயன்கட்டு உயிரிழப்புக்கு பின்னர் என்னென்ன சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அவை அனைத்தும் நீதியான முறையில் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் இந்தக் கதவடைப்பு என்பது அரசியல் தரப்பினர் இழந்து போன தங்களின் வாக்கு வங்கியை அதிகரிக்கவே மேற்கொள்கின்றனர்.

இந்தக்கதவடைப்புஎன்பதுதமிழ்அரசியல்வாதிகள் இன்னும் மாற தயா ரில்லை என்பதையே வெளிப்படுத்துகிறது, தமிழ் மக்களின் பிரச்சினைகளை வைத்து அரசியல் செய்யும் அரசியல் வாதிகளுக்கு இவ்வாறான போராட்டங்கள் தேவைப்படுகின்றன. கடந்த காலங் களில் நாட்டில் இராணுவ ஆட்சி போன்ற ஆட்சி நிலைமை காணப்பட்டது ஆனால் இப்போது அப்படியல்ல. இந்த நாட்டில் இன, மத, மொழி ரீதியான வேறுபாடுகளைக் கடந்து தேசிய ஒற்றுமை உருவாக்கும் நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துள்ளோம். - என்றார்.

முத்தையன்கட்டு சம்பவம் கூட தமிழ் இளைஞன் என்ற காரணத்திற்காக இடம்பெற்றது அல்ல. அது நாட்டில் ஏனைய பிரதேசங்களில் இடம்பெறும் சம்பவங்கள் போன்றது எனத் தெரிவித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இந்த கதவடைப்பினை வர்த்தகர்களும் பெரும்பாலான தமிழ் மக்களும் நிரா கரித்துள்ளனர். ஆனாலும் சில வர்த்த கர்கள் தங்களின் சங்கங்கள் எடுக்கும் தீர் மானத்திற்கு கட்டுப்பட வேண்டியவர்களாக உள்ளனர் என்றும் தெரிவித்தார்.






## தபால் தொழிற்சங்கங்களின் போராட்டம் நியாயமற்றது

### தபால் மா அதிபர் தெரிவிப்பு

தபால் தொழிற்சங்கள் முன்வைத்துள்ள 19 கோரிக்கைகளில் பல ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளவையாகும். கடந்த வாரம் இடம்பெற்ற பேச்சுக்களின்போது அவற்றில் சிலவற்றுக்கு தபால் தொழிற்சங்கங்கள் இணக்கமும் தெரிவித்துள்ளன. அவ்வாறு இணக்கம் தெரிவித்த பின்னர் இவ்வாறு வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடுவது நியாயமற்றது என தபால்மா அதிபர் ருவான் சத்குமார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தபால் தொழிற்சங்கள் முன்வைத்துள்ள 19 கோரிக்கைகளில் பல ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளவையாகும். தபால் ஒருங்கிணைப்பு மற்றும் நிர்வாக அலுவலகங்களில் வருகை மற்றும் பணி நிறைவு செய்து செல்லும் போது கைரேகைப் பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ளமை, மேலதிக வேலை நேர கொடுப்பனவு மற்றும் மேலதிக வேலை நேர கொடுப்பனவுவழங்கப்படுவதில்தாமதம் ஏற்படுகின்றமை உள்ளிட்டவற்றுக்கு எதிர்ப்பினைத் தெரிவித்தே இந்த வேலை நிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராகவே இந்த வேலை நிறுத்த போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நாம் அனைவரும் அரச உத்தியோகத்தர்கள் என்பதால் அரசாங்கத்தின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆட்சேர்ப்பு தொடர்பான கோரிக்கையும் இவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு 600 தபால் அதிகாரிகளை சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய போட்டிப்பரீட்சைகளை நடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டு சம்பளம் மற்றும் மேலதிக வேலை நேர கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ள வீதத்தை அடிப்படையாகக் கொண்டு அவதானித்தால் தொழி;ற்சங்கங்களால் முன்னெடுக்கப்படும் வேலை நிறுத்த போராட்டம் நியாயமற்றதாகும். கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. அதற்கமைய குறிப்பிட்ட வழிமுறையொன்றுக்கு இணக்கம் காணப்பட்டு அவர்களால் கையெழுத்திடப்பட்ட கடிதமொன்றும் எம்மிடமுள்ளது. அதற்கமைய கைரேகை பதிவிற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். அவ்வாறிருக்கையில் தற்போதும் அதற்கும் எதிர்ப்பினை வெளியிட்டு வேலை நிறுத்தங்களில் ஈடுபடுவது நியாயமற்றது என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மின்சார வாகன வளர்ச்சி பின்தங்கும் பௌதீக அடித்தளம்

இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்த காலத்திலிருந்து மக்கள் தங்கள் வாழ்க்கை முறையில் பல மாற்றங்களைத் தேடிக்கொண்டனர். எரிபொருள் விலை உயர்வு, இறக்குமதி கட்டுப்பாடுகள், அன்றாட வாழ்க்கையின் சிரமங்கள் ஆகியவை மக்கள் விருப்பங்களை மாற்றியமைத்தன. இத்தகைய சூழலில், சமீப ஆண்டுகளில் இலங்கைக்குள் மின்சார வாகனங்கள் (சிாவி) வரவு திடீரென அதிகரித்திருப்பது ஒரு புதிய போக்காகத் திகழ்கிறது.

ஆளும்தரப்பும் இந்தப் போக்கை ஊக்குவிக்கும் வகையில் பல அறிவிப்புகளைச் செய்துள்ளது. 'பசுமை ஆற்றல்' (Green Energy) மற்றும் –சூழல் நட்பு போக்குவரத்து– (Eco-friendly transport) எனும் கோஷங்களுடன், வரி சலுகைகள் மற்றும் இறக்குமதி விதிமுறைகளில் தளர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால், நகரங்களிலும் கிராமங்களிலும் மின்சார வாகனங்களின் பயன்பாடு அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

ஆனால் இங்கே மிகப்பெரிய சிக்கல் ஒன்றுள்ளது. மின்சார வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்தாலும், அதற்கேற்ற பௌதீக மாற்றங்கள் (infra-structure) நாட்டில் போதுமான அளவில் ஏற்படவில்லை. அதாவது, சார்ஜ் நிலையங்கள், பராமரிப்பு வசதிகள், தொழில்நுட்ப நிபுணத்துவம் போன்ற அடிப்படை அம்சங்கள் இன்னும் மிகத் தூரத்தில் உள்ளன.

மின்சார வாகனங்கள் பயன்படுத்துவதில் முதன்மையான சவால் சார்ஜ் வசதி ஆகும். தற்போது இலங்கையில் சில தனியார் நிறுவனங்கள் மற்றும் சில அரசாங்க அமைப்புகள் சார்ஜ் நிலையங்களை நிறுவியுள்ளன. ஆனால், அவற்றின் எண்ணிக்கை மக்கள் தேவையைப் பூர்த்தி செய்யத் தகுந்த அளவிற்கு இல்லாமல் உள்ளது. குறிப்பாக, கொழும்பு போன்ற பெரிய நகரங்களைத் தவிர்த்து, மாவட்ட மட்டங்களில் கூட சார்ஜ் நிலையங்கள் அரிதாகவே காணப்படுகின்றன.

இதன் விளைவாக, மின்சார வாகன உரிமையாளர்கள் நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்வதில் சிரமத்தை எதிர்கொள்கிறார்கள். சார்ஜ் முடிந்துவிடும் என்ற அச்சம் காரணமாக பலர் தங்கள் வாகனங்களைப் பயன்படுத்துவதையே கட்டுப்படுத்துகின்றனர். இது மின்சார வாகனப் பயன்பாட்டின் வளர்ச்சியைத் தடுக்கக்கூடிய முக்கிய காரணியாக மாறியுள்ளது.

இலங்கை இன்னும் மின்சார உற்பத்தி குறைபாட்டிலிருந்து முழுமையாக மீளவில்லை. வறட்சிக் காலங்களில் மின்வெட்டுகள் நடைமுறையில் உள்ளன. இத்தகைய சூழலில், ஆயிரக்கணக்கான மின்சார வாகனங்கள் கூடுதலாக மின்சார தேவையை உருவாக்குகின்றன. பொதுமக்களுக்கு வீட்டு மின்சாரத்தை கூட வழங்க சிரமப்படும் அரசாங்கம், வாகனங்களுக்குத் தேவையான மின்சாரத்தை எவ்வாறு நிலைத்த முறையில் வழங்கப் போகிறது என்பது இன்னும் தெளிவாகவில்லை.

இதற்கான தீர்வாக, புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களை (Renewable Ener-gy) – குறிப்பாக சோலார் சக்தியை – விரைவாக விருத்தி செய்ய வேண்டும். ஆனால் அந்த திசையில் முன்னேற்றம் இன்னும் மந்தமாகவே உள்ளது.

மின்சார வாகனங்களின் பராமரிப்பு என்பது சாதாரண எரிபொருள் வாகனங்களிலிருந்து மாறுபட்டது. உயர் மின்னழுத்த பேட்டரிகள், மின்னியல் அமைப்புகள், சிறப்பு மென்பொருட்கள் போன்றவற்றிற்கு நிபுணத்துவ அறிவு தேவை. ஆனால், இலங்கையில் இத்தகைய தொழில்நுட்ப நிபுணர்கள் மிகக் குறைவாக உள்ளனர்.

மேலும், மாற்று உதிரிபாகங்கள் (spare parts) மற்றும் சேவை மையங்கள் பெரும்பாலும் இறக்குமதியில் சார்ந்திருப்பதால், பயனாளர்கள் அதிக செலவினத்திற்கும் நீண்ட காத்திருப்பு காலத்திற்கும் உள்ளாகின்றனர். இந்நிலையைச் சரிசெய்யாத பட்சத்தில், மின்சார வாகனங்களின் ஆரம்ப உற்சாகம் விரைவில் குறைந்து விடும் அபாயம் உள்ளது.

ஆளும்தரப்பு "மின்சார வாகனங்களை ஊக்குவிக்கிறோம்" என்று அறிவிப்பதோடு மட்டுமே நிற்கிறது. ஆனால் அதற்கான நிலைத்த அடித்தளம் (sustainable infrastructure) அமைப்பதில் பெரும் பின்தங்கல் காணப்படுகிறது. சாலைப்பாதைகளின் மேம்பாடு, சார்ஜ் நிலைய வலையமைப்பு, சோலார் மின்சார உற்பத்தி விருத்தி, சேவை மையங்கள் நிறுவுதல் போன்றவை ஒன்றுடன் ஒன்று இணைந்த திட்டமாக முன்னெடுக்கப்படவேண்டியது அவசியம்.

இதற்கு மாறாக, அரசாங்கம் சீர்திருத்தங்களைத் துண்டுத் துண்டாக மட்டுமே செய்கிறது. இறக்குமதி அனுமதி கொடுத்து விட்டது; ஆனால், சார்ஜ் வசதிகள் இல்லாமல் வாகனங்களைப் பயன்படுத்தும் மக்கள் கஷ்டப்படுகின்றனர். இது ஆளும்தரப்பின் கொள்கை பிழையையும் குறுகிய நோக்கையும் வெளிப்படுத்துகிறது.

மின்சார வாகனங்கள் உலகளவில் பசுமை எதிர்காலத்துக்கான மாற்றமாகக் கருதப்படுகின்றன. காபன் உமிழ்வைக் குறைத்து, சுற்றுச்சூழலைக் காப்பது என்பதே அதன் முக்கிய நோக்கம். இலங்கையிலும் இதற்கான உணர்வு அதிகரித்திருப்பது நிச்சயமாக பாராட்டத்தக்கது.

ஆனால், மக்கள் செலவில் வாங்கும் வாகனங்கள் பயன்பாட்டில் சிரமம் ஏற்படுமாயின், அது எதிர்காலத்தில் பெரிய நம்பிக்கை இழப்பாக மாறும். அரசாங்கம், இந்த மாற்றத்தை வழிநடத்தும் பொறுப்பை உணர்ந்து, முழுமையான திட்டத்துடன் பௌதீக அடித்தளத்தை உருவாக்க வேண்டும். தனியார் துறையையும் ஊக்குவித்து, மாவட்டமெங்கும் சார்ஜ் நிலையங்களை அமைத்தல், சோலார் சக்தியைப் பெருக்குதல், தொழில்நுட்பப் பயிற்சி மையங்களைத் தொடங்குதல் போன்றவை உடனடியாக முன்னெடுக்கப்படவேண்டியவை.

இலங்கையில் மின்சார வாகன வளர்ச்சி என்பது ஒரு நல்ல அறிகுறி. ஆனால், அது வெறும் பாணி மாற்றமாக (trend) மாறாமல், நாட்டின் போக்குவரத்து அமைப்பை முற்றிலுமாகப் புதுப்பிக்கும் மாற்றமாக (transfor-mation) அமைய வேண்டுமெனில், பௌதீக அடித்தளத்தை வலுப்படுத்துவது தவிர்க்க முடியாத ஒன்று.

அரசாங்கம் மற்றும் மக்கள் இருவரும் ஒன்றிணைந்து செயல்படவேண்டிய காலம் இது. இல்லையெனில், 'பசுமை ஆற்றல்' என்ற கோஷம் காகிதத்தில் மட்டுமே இருந்து, மக்கள் நிஜ வாழ்வில் ஏமாற்றமடையும் அபாயம் மிக அதிகம்.

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் அதனாலேயே அந்த சட்டத்தை நாம் மாற்றுவோம்

### இப்படிச் சொல்கிறார் அமைச்சர் விமல்

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என்பதே எமது அரசின் நிலைப்பாடு, எனவே நாம் அதனை மாற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளோம் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், சிவில் விமானசேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் பயங்கரவாத தடைச்சட்டம் உருவாக்கப்பட்டதே எமது கட்சியின் அரசியல் எழுச்சிளை தடை செய்ய வேண்டும் என்பதற்காகவே, எனவே இச் சட்டத்தை பற்றி நாம் நன்கு அறிந்துள்ளோம். எனவே பயங்கரவாத தடைச்சட்டதை நீக்குவதே எமது அரசின் நோக்கம் எனத் தெரிவித்த அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் இன்றும் பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலீஸாரால் விசாரணைக்கு அழைக்கப்படும் சூழ் நிலைகள் தொடர்ந்து நிலவுகிறது.

ஞாயிற்றுக்கிழமை (17) முல்லைத்தீவு ஊடகவியலாளர் குமணன் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். இந்த நிலைமை ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் செயற்பாடாக காணப்படுகிறது எனக் கேள்வி எழுப்பிய போது பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் ஊடகவியலாளர் விசாரணைக்கு அழைக்கப்பட்ட விடயம் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என்றும் குறிப்பிட்டார்.

## ஐ.நா. கண்காணிப்பு, பொறுப்புக்கூறல் இலங்கையில் தொடர்வது அவசியம்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

இலங்கையில் கடந்தகால மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுத்த கட்டமைப்பு ரீதியான காரணிகள் இன்றும் தொடர்வதை ஐக்கிய நாடுகள் சபையின் சமீபத்திய மனித உரிமைகள் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதிப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தின் அவசியத்தை மீண்டும் உறுதிப்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரை முன்னிறுத்தி வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கை, இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்த ஒரு கவலைக்குரிய சித்திரத்தை முன்வைப்பதுடன், சர்வதேச சமூகம் ஏன் இலங்கை விடயத்தில் தனது கண்காணிப்பைத் தளர்த்தக்கூடாது என்பதற்கான ஒரு எச்சரிக்கை மணியாகவும் உள்ளது.

ஐ.நா. அறிக்கை குறிப்பிடும் கட்டமைப்பு ரீதியான காரணிகள் என்பது தற்காலிகப் பிரச்சினைகள் அல்ல. மாறாக, அவை நாட்டின் நிர்வாக, சட்ட மற்றும் பாதுகாப்பு இயந்திரங்களில் ஆழமாக வேரூன்றியுள்ள நீண்ட காலப் பிரச்சினைகளாகும். சர்வதேச கண்டனங்கள் இருந்தபோதிலும், தன்னிச்சையான கைதுகளுக்கும், சித் திரவதைகளுக்கும் வழிவகுக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னும் முழு மையாக நீக்கப்படவில்லை. போர்க்குற்றங்கள் மற்றும் பாரிய மனித உரிமை மீறல்களில் அவர்கள் தொடர்ந்தும் பதவிகளில் நீடிக்கப்பட்டுள்ளனர். மேலும் கடந்தகால மீறல் களுக்குப் பொறுப்பானவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கான முயற்சிகள் இல்லாமை மற்றும் உள்நாட்டு நீதிப் பொறிமுறைகள் தோல்வியடைந்தமை என்பன சர்வதேசத்தின் தலையீட்டை வலியுறுத்துகின்றன..

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதிப் பணிப்பாளர் குறிப்பிடும் ஐ.நா. உயர்ஸ்தானிகரின் பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் என்பது, இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் பெரும் மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைச் சேகரித்து, பாதுகாத்து, பகுப்பாய்வு செய்யும் ஒரு சர்வதேசப் பொறிமுறையாகும். இலங்கை இத்தகைய சர்வதேசப் பொறிமுறைகளைத் தொடர்ச்சியாக நிராகரித்து, நாட்டின் இறைமையில் தலையிடுவதாகக் குற்றம் சுமத்துகிறது. ஆகவே, எதிர்வரும் ஜெனீவா கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான ஒரு புதிய தீர்மானத்தின் மூலம் பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தை மேலும் வலுப்படுத்தவும், அதன் ஆயுட்காலத்தை நீட்டிக்கவும் சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை வலுப் படுத்துகிறது. இலங்கையின் கட்ட மைப்பு மாறாத வரை, சர்வதேசத்தின் கண் காணிப்பும் தளரக்கூடாது. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

### பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிரான

## நம்பிக்கையில்லா பிரேரணையின் உள்ளடக்கத்தில் சட்டச் சிக்கலாம்

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணையின் உள்ளடக்கம் குறித்து சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன சட்டமா அதிபரிடம் சட்ட ஆலோசனை கோரியுள்ளதாக அறிய முடிகிறது.

நம்பிக்கையில்லா பிரேரணையில் சட்ட சிக்கல் காணப்படுவதால் சட்ட ஆலோசனைகள் கிடைக்கும் வரையில் நம்பிக்கையில்லா பிரேரணையை நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்காமலிருக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து நம்பிக்கையில்லா பிரேரணையை சபாநாயகரிடம் கடந்த 12 ஆம் திகதி முன்வைத்தன.

இந்த நம்பிக்கையில்லா பிரேரணையில் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக 15 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அருண ஜயசேகர கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக செயற்பட்டமை குறித்த குற்றச்சாட்டில் பிரதானவொன்றாக கருதப்படுகிறது.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரனவின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளிட்ட விடயதானங்கள் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படாத நிலையில்,அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வருவதற்கு சட்ட இயலுமை கிடையாது என்று ஆளும் தரப்பின் பெரும்பாலானவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.ஆகவே இது பழிவாங்கும் பிரேரணை என்று ஆளும் தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை அரசியல் வரலாற்றில் இதுவரை காலமும் பிரதி அமைச்சர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படவில்லை என்றும் ஆளும் தரப்பினர்கள் நாடாளுமன்ற சந்திப்புக்களின் போது குறிப்பிட்டுள்ளனர்.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனித்தனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical
University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.08.2025இல் வெளியிடப்பெற்றது